# இணையத்தில் தமிழ்த் தளங்கள் - ஒரு சுய பரிசீலனை

அப்பணசாமி
(founder editor: aaraamthinai.com)

---

உலகத் தமிழனை ஒருங்கிணைக்கும் "தமிழ் இணையம் 2001" மாநாடு நிகழும் இந்நேரத்தில், தமிழ் இணைய வளர்ச்சியை, சுயவிமர்சனக் கண்ணோட்டத்தோடு பரிசிலிப்பது அவசியமாகிறது. தமிழ் மொழி இணையத்தில் பவனிவந்து, உலகக் கணனி மொழியாக ஏற்றம் பெற்றதில் நமக்குச் சாதகமான அம்சங்கள் பற்றியே இதுவரை பெருவாரியாகப் பேசிவந்துள்ளோம்.

கணனி மற்றும் இணைய நிபுனத்துவத்தில் தமிழர்களின் தேர்ச்சி, தமிழ் மொழி-ஒருமைப்பாடு மீது ஆர்வம், கடல் கடந்து வாழும் தமிழுறவினர் பற்றிய அக்கறை - கவலை போன்றவைதான் தமிழிணையம் இன்று வளர்ந்துள்ள நிலைக்கு காரணங்கள். ஆனால், ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக, இந்திய மொழிகளில் அதிக இணையப் பயன்பாடு கொண்ட மொழி என்ற பெருமையை சில ஆண்டுகள் முன்பே பெற்றுவிட்ட தமிழன், இணையத்தின் தனிச்சிறப்பான அதிவேக வளர்ச்சியோடு தன்னை இணைத்துக் கொண்டானா என்பது கேள்விக்குரியதுதான்.

ஆங்கிலம்போல, இணையத்தில் ஒரு தமிழன் தன் தாய்மொழியில் ஊடாட முடிகிறதா, செயலாற்ற முடிகிறதா, இந்த முயற்சிகள் எத்தகைய கால விரயத்தை ஏற்படுத்துகின்றன, கனனி மொழியாக, உலகப் பொருளாதார மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறதா, எத்தன வகையான எழுத்துருக்கள், எத்தனை விதமான மென்பொருட்கள், எத்தனை செயல்தளங்கள் என இனையத்தில் தமிழ் அயற்சி கொள்ள வைக்கவில்லையா? தமிழ் இணையத்தில் இன்னமும் ஒருமைப்பாடு ஏற்படவில்லை என்பதைத்தானே இந்நிலை குறிக்கிறது. சரி, இதுதான் போகட்டும். அந் நிலைமை ஏற்படும் வரை தமிழ், ஆங்கிலம் இரண்டையும் பயன்படுத்துவோம் என்ற மனபக்குவம்கூட ஏற்படவில்லை.

நம் மொழியில் ஆயிரத்துக்கும் அதிகமான தனி இணையப் பக்கங்கள், நூற்றுக்கணக்கான இணையத்தளங்கள் செயல்படுகின்றன. இணையத்தைப் பயன்படுத்துவோரில் 25 லட்சம் முதல் ஒருகோடி பேர் வரை தமிழர்கள். இவர்களனைவரையும் மேற்சொன்ன தமிழிணையப் பக்கங்களால் ஒருங்கிணைத்து விட்டோம் என உறுதியாகக் கூறமுடியுமா?

பெரும்பான்மையான தமிழ்த் தளங்கள் தனி மரங்களாக நிற்கின்றன; அவை DYNAMIC ஆக எழுத்து ருக்களை தேர்வு செய்துகொள்கின்றன எனக் கூறினாலும் உடனடியாக கணனியில் இறக்கிக் கொள்ள முடிகிறதாயில்லை. விவாதங்கள் நடத்துவதற்கு விதவிதமான மென்பொருள்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. WORD ஐ இன்னமும் தமிழால் செயலாற்றி இணையத்தில் ஊடாட முடியவில்லை. ஒரு எழுத்துருவில் தொகுக்கப் பட்டதை மற்ற எழுத்துருவில் எளிமையாக மாற்றிப் பயன்படுத்த இயலவில்லை. INTERFACE, DATABASE போன்ற செயல்பாடுகள் தமிழுக்கு எளிமைப் படுத்தப்பட வில்லை. ஆனால், தனது சரக்குதான் உயர்ந்தது என்ற மனநிலை கணனி நிபுனர்கள் மத்தியில் உள்ளது. வனிகத்திற்கு அது தேவைதான். இருந்தாலும்...

ஆங்கிலம் போல தமிழ் எழுத்துருக்களையும் கனமில்லாமல் பயன் படுத்த முடியவேண்டும்.(ஆங்கிலத்தில் நூறு பக்கங்களைக் கொள்ளும் பைட்டுகளை தமிழில் சில பத்துப் பக்கங்களே நிரப்பி விடுகின்றன.)

மின் வனிகம், கல்வி, அகராதிகள் போன்ற வர்த்தக வாய்ப்புள்ள பகுதிகளை தமிழ்த் தளங்கள்

இன்னமும் அடையாளம் காணவில்லை. எல்லாத் தளங்களுமே செய்ததையே திரும்பச் செய்து போரடிக்கின்றன. அச்சிதழ்கள் போல ஒரிசில எழுத்தாளர்களையே சுற்றி வருகின்றன. ஒரு இணைய இதழ் பிரபல எழுத்தாளர் ஒருவரின் நேர்காணலை வெளியிட்டு விட்டால், மற்றவர்களும் அதே எழுத்தாளரிடம் பேட்டியெடுத்து போராடிக்கிறார்கள். இந்த இணைய இதழில் ஒரு கோயிலை பற்றிய தகவகள் வெளியானால் அந்தத் தளத்தில் அதே கோயில் அதே தகவல்களை மறுநாள் பார்க்கலாம்.

ஏன் இவர்கள் வேறு வேறுவிதமாகச் சிந்திக்கக் கூடாது? தமிழ்த் தளங்கள் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியோடு ஏன் தேங்கி விட்டன என சிந்திக்க வேண்டாமா?

முதலாவதாக, தமிழ் - தமிழர் பாற்றிய தகவல்களை மாற்று மொழிகளிலும் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்கலாம். இப்போது பொதுவாக இணைய உலகில் ஏற்பட்டுள்ள சரிவுநிலையிலிருந்து தமிழை வெற்றி கொள்ள இதுபோன்ற அனுகுமுறைகள் உதவவும். இரண்டாவதாக,உலகில் எவ் மூலையில் இருக்கும் தமிழனும் எந்த எழுத்துருவையும் பயன்படுத்தும் நிலை உருவாக்கப் பட்டேயாக வேண்டும். அதற்கான செயல்திட்டத்தை நாம் கண்டடைய வேண்டும். மூன்றாவதாக, பாமரத் தமிழனும் பொம்மை (ikon)கள் மூலம் இணையத்தைப் பயன்படுத்தும் வகையில் தமிழிணையச் செயல் முறை எளிமைப்பட வேண்டும். நான்காவதாக, தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் தமிழர்கள் அனைவரும் இணையத்தைப் பயபடுத்தும் நிலைமை ஏற்பட வேண்டும். இவற்றில் இலங்கை, தமிழ்நாடு நிலைமைகள் மோசமாக இருக்கின்றன. இலங்கை அரசியல், பொருளாதாரக் காரணங்களால் சிரமப்ப்டுகின்றது. ஆனால், தமிழ்நாட்டில்தான் துரதிர்ஷ்டமான நிலைமை.

சிற்றூர்களிகூட இணைய மையங்கள் புற்றீசல்கள் போல பெருகியுள்ளன. பத்து வயது மாணவ - மாணவிகூட மின்னஞ்சல் முகவரி வைத்து இணையத்தில் உலாவுகிறார்கள். பல நேரங்களில் இணைய மையங்களில் நீண்ட வரிசையில் இளைஞர்கள் காத்திருப்பதைக் காணமுடிகிறது. இந்தச் சித்திரம் தமிழ்நாட்டில் லட்சக்கணக்கானவர்கள் இணையத்தைப் பயன்படுத்துவதை உறுதிசெய்கிறது. ஆனால், இவர்களில் எத்தனை பேருக்கு தமிழ் இணையத் தளங்களைப் பற்றித் தெரியும். இவர்களில் தமிழ்ப் பக்கங்களைத் தேடுபவர்கள் 5 சதவீதம்கூட இருக்காது.

உண்மையில் இந்த சந்தை ஆதாரத்தை நாம் வீரியத்துடன் பயன்படுத்திக் கொண்டோமா என நம்மை நாமேதான் கேட்டுக் கொள்ளவேண்டும். எதோ தேவைக்காகதானே இந்த லட்சக்கணக்கானவர்கள் இணையத்தை அனுகுகிறார்கள். இவர்களது தேவையை ஏன் நம்மால் பூர்த்தி செய்ய இயலவில்லை. தமிழ் இணையம் 2001 - இதற்கு வழிகாட்டட்டும்.